நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 24.03.2023
---------------------------------------

<u>சாத்தூர் நகர்மன்றம் சாதாரணக் கூட்டம் அறிவிப்பு</u>

<u>கூட்டம் எண். 12</u>

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2053ம் வருடம் பங்குனி 13 ஆம் நாள் 2023ம் ஆண்டு மார்ச் மாதம் 27.03.2023ம் தேதியன்று திங்கள்கிழமை மாலை 4.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர்மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நகர்மன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நகர்மன்றத் தலைவர்
சாத்தூர் நகராட்சி.

<u>பொருள் எண்.1</u>

<u>சாத்தூர் நகர்மன்றத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

சாத்தூர் நகராட்சியானது வளர்ந்து வரும் நகரமாகும். மேலும் சாத்தூர் நகர் பகுதியை ஒட்டிய ஜவுளி பூங்கா அமையப்பட உள்ளது. மேலும் சிவகாசி மற்றும் திருவில்லிபுத்தூர் அதனை சுற்றியுள்ள பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் நெடுந்தூரப் பயணத்திற்கு சாத்தூர் இரயில் நிலையத்தை பயன்படுத்தி வருகின்றனர். மேலும் வடக்கிலிருந்து வரும் வியாபாரிகளும், தெற்கு நோக்கி திருச்செந்தூர் மற்றும் கன்னியாகுமரிக்கு செல்லும் பக்தர்களும், அதேபோல் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் சுற்றுலா பயணிகள் மற்றும் காசியாத்திரிக்கைக்கு செல்லும் பக்தர்கள் சாத்தூர் இரயில் நிலையத்திற்கு வந்து தான் மற்ற ஊர்களுக்கு செல்கின்றனர். எனவே நெடுந்தூரம் செல்லும் இரயில்களும் வடக்கு மற்றும் தெற்கு நோக்கி பயணிக்கும் அனைத்து இரயில்களும் சாத்தூர் இரயில் நிலையத்தில் நின்று செல்ல வேண்டும். மேலும் இந்த இரயில் நிலையத்தில் அமைந்துள்ள நடை மேம்பாலத்தில் வயதானவர்கள், ஊனமுற்றவர்கள் கடந்து செல்ல மிகவும் சிரமம் ஏற்படுவதால் கிழக்கு பக்கம் மற்றும் மேற்கு பக்கம் செல்வதற்கு வசதியாக லிப்ட் வசதி செய்துதர தெற்கு இரயில்வே நிலையத்திற்கு கோரிக்கை வைத்து ஏகமனதாக இம்மன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

நகர்மன்றத் தீர்மானம் எண்.175, நாள்: 27.03.2023
தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

சாத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான பழைய அலுவலகக் கட்டிடத்தினை வாடகைக்கு விடும் பொருட்டு மேற்படி கட்டிடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு பொதுப்பணித்துறை விலைவிகித அட்டவணையின் படியும், சார்பதிவாளர் அலுவலக விலை மதிப்பீட்டு விகிதத்தின் படியும் வாடகைக்கு விடுவதற்கு மாத வாடகை மதிப்பீடு தரைத்தளம் ரூ.54,216/- மற்றும் முதல்தளம் ரூ.45,870/-, ஆக மொத்தம் ரூ.1,00,086/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. நகர்மன்றத் தீர்மானம் எண்.140, நாள்.25.11.2022 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.
2. பழைய அலுவலக கட்டிடத்தை பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு பொதுப்பணித்துறை மற்றும் சார்பதிவாளர் மதிப்பீட்டு சந்தை வழிகாட்டுதலின்படி வாடகை நிர்ணயம் செய்து அரசாணை நிலை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007ன்படி மேற்படி கட்டிடத்திற்கு மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 15 சதவீதம் வாடகை உயர்வு செய்து வாடகைக்கு விடுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.804/2022/சி2)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.176, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

விருதுநகர் மாவட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல்களில் பயன்படுத்தப்படும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை விருதுநகர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கிட்டங்கி B-ல் 01.02.2020 முதல் 30.11.2020 வரையிலான மாதங்களுக்கு இருப்பு வைத்துள்ளமைக்கு மாத வாடகை ரூ.47,590/-ஐ செயலாளர், விருதுநகர் விற்பனைக்குழு அவர்களுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதியிலிருந்து வழங்க மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சாத்தூர் நகராட்சிக்கு 2019ம் ஆண்டு மொத்தம் வாக்குச்சாவடி - 35, கட்டுப்பாட்டு கருவி - 42, வாக்குப்பதிவு கருவி - 168, மொத்தம் - 210, மொத்த வாடகை ரூ.47,590/-ஐ Secretary, Virudhunagar Market Committee, Virudhunagar அவர்களுக்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1387/2017/அ1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.177, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை செய்யும் கட்டிடம் (Slaughter House) 2020-2021ம் ஆண்டு பொது ஏலம் எடுத்து நடத்தி வந்த மனுதாரர் திரு.ஆ.சக்திமுருகன் என்பவர் மனுவில் கோரியபடி 2022-2023ம் ஆண்டு ஆடுவதை செய்யும் கட்டிடம் பழுதடைந்துள்ளதால் அதனை மராமத்து பணி மேற்கொள்ளும் பொருட்டு ஏப்ரல் மாதம் பணி மேற்கொள்ளப்பட்டு ஜீன் மாதம் மராமத்து பணி முடிக்கப்பட்டு அதன் சாவியை குத்தகைதாரரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதால் 2022-2023ம் ஆண்டுக்கான குத்தகை தொகையில் இருந்து இரண்டு மாதத்திற்கான குத்தகை தொகையை மன்ற அனுமதி பெற்று கணினியில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

2022-2023ம் ஆண்டுக்கான வரி உட்பட குத்தகை தொகை ரூ.1,88,043/-, இரண்டு மாத தொகை ரூ.30,319/-ஐ நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.178, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.5</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தில் வெள்ளரிக்காய் மற்றும் வெள்ளரிப்பழம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2023-2026ம் ஆண்டிற்கு மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 28.02.2023ம் தேதி மறுபொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி பலமுறை கோரப்பட்டதில் யாரும் கலந்து கொள்ளவில்லை.

மேற்காணும் உரிமத்திற்கு 2021-2022ம் ஆண்டிற்கு பொதுஏலம் கோரியதில் குத்தகைதாரர்கள் போட்டியில் ஏலத்தொகையை கூடுதலாக்கி கோரப்பட்ட ஏலத்தொகையை செலுத்தாமலும், நடத்தாமலும் சென்றுவிட்டனர். மேலும் 2020 ஏப்ரல் மாதம் உலகம் முழுவதும் கொரோனா கோவிட்-2019 நடைமுறையில் இருந்து வந்தது. அப்போதைய காலக்கட்டத்தில் 144 தடை உத்திரவு அமுலில் இருந்ததால் கடைகள், பேருந்துகள் தொழில்கள் எதுவும் நடைபெறவில்லை. எனவே குத்தகைதாரர் குத்தகை பணம் செலுத்தவில்லை. ஆதலால் இந்நகராட்சிக்கு இழப்பு ஏற்படாமல் இருக்கும் பொருட்டு துறைமூலம் வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. நாள் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் வசூல் செய்து செலுத்தும் பட்சத்தில் ஆண்டுக்கு ரூ.1,09,500/-ம் செலுத்தப்பட்டு வருகிறது. இத்தொகை கணக்கிடும் பொழுது ஒரு பணியாளருக்கு ஊதியம் வழங்குவதை விட குறைவாக உள்ளதாலும், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததினாலும், மேலும் பலமுறை மேற்படி இனத்திற்கு பொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், மறுஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலத்தில் யாரும் கலந்து கொள்ளவில்லை. கலந்து கொள்ளப்பட்ட ஏல நாட்களில் ஏலம்கோர யாரும் முன்வரவில்லை. இந்நிலையில் 28.02.2023ம் தேதி மறுபொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கீழ்க்கண்ட விபரத்தின்படி கலந்து கொண்டவர்களில் உச்ச ஏலக்கேள்வி தொகையினை முடிவு செய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | குறைவு | கூடுதல் |
| 1 | திரு.P. ஐயப்பசாமி,<br>சுந்தரகுடும்பன்பட்டி,<br>செட்டுடையான்பட்டி போஸ்ட், சாத்தூர். | 2,40,500 | -- |
| 2 | திரு.கு.இராமமூர்த்தி,<br>த/பெ.குருசாமி,<br>விஜயராம்பேரி, சாத்தூர். | 2,40,600 | -- |
| 3 | திரு.ஏ.பெருமாள்சாமி,<br>3/67, நடுத்தெரு, பிறவிப்பட்டி,<br>கோல்வார்பட்டி, சாத்தூர். | 2,40,700 | -- |
| 4 | திரு.வி.சின்னச்சாமி,<br>செல்லியாரம்மன் கோவில் தெரு,<br>சாத்தூர். | 2,40,900 | -- |
| 5 | திரு.சோ.தன்ராஜ், த/பெ.சோலையப்பன்,<br>சுந்தரகுடும்பன்பட்டி,<br>செட்டுடையான்பட்டி போஸ்ட், சாத்தூர். | -- | 2,41,000 |

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் திரு.வி.சின்னச்சாமி என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ.2,40,900/-ஐ விட திரு.சோ.தன்ராஜ் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2,41,000/-ம் கூடுதலாக இருப்பதால் மேற்படி பொது ஏலக்கேள்வி தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்..

(ந.க.எண்.1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.179, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN67Z 4628 அவசர அவசியம் கருதி கியர்பாக்ஸ் பழுது நீக்கம் செய்யப்பட்ட செலவு ரூ.1,695/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திரு.சு.ஜெயக்குமார், ஓட்டுநர் மேற்படி வாகனத்திற்கு செலவு செய்த ரூ.1,695/-யை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.185/2023/எச்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.180, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.7**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகன எண்.TN67AH 6760 தகுதிச்சான்று பெறுவதற்காக Reflector ஒட்ட செலவு ரூ.2,000/-ம் ஆய்வுக்கட்டணம் ரூ.850/-ம், புகை பரிசோதனை கட்டணம் ரூ.200/-ம், மேலும் டயர்கள் பஞ்சர் பார்க்க செலவு ரூ.600/-ம், மேற்படி வாகனத்திற்கு ஜெயக்குமார், ஓட்டுநரால் செலவு செய்யப்பட்ட மொத்த செலவுத் தொகை ரூ.3,650/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

திரு.சு.ஜெயக்குமார், ஓட்டுநர் மேற்படி வாகனத்திற்கு செலவு செய்த ரூ.3,650/-யை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.187/2023/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.181, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

சாத்தூர் நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF++ சான்றிதழ் பெற விண்ணப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியில் உள்ள 12678 குடியிருப்பு பகுதிகளில் 922 குடியிருப்புகளில் மட்டுமே கழிப்பறை வசதிகள் இல்லை என்று அறியப்பட்டுள்ளது. மேற்படி 922 குடியிருப்பு பகுதிகளில் வசிக்கும் மக்களின் பயன்பாட்டிற்காக இந்நகர் பகுதிகளில் 16 இடங்களில் சமுதாயக் கழிப்பறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இந்நகருக்கு தினசரி வந்து செல்லும் மக்களுக்காக பேருந்து நிலையம், முக்குராந்தல் பகுதி, வெள்ளக்கரை ரோடு பகுதிகளில் ஐந்து பொதுக்கழிப்பறை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் கசடு கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவுநீர் மற்றும் மலக்கழிவுகள் சுத்திகரிப்பு நிலையம் தற்பொழுது வெள்ளோட்டம் நிலையில் செயல்பட்டு கொண்டிருக்கிறது. மேலும் நகர்பகுதிகளில் திறந்தவெளியில் மலம் ஜலம் கழிப்பது தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, சுவர் சித்திரங்கள் வரையப்பட்டும் தினசரி நாளிதழ்களில் விழிப்புணர்வு செய்திகள் வெளியிடப்பட்டும் வரப்படுகிறது. ஆகவே இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ODF++ சான்றிதழ் பெறுவதற்கு விண்ணபிப்பிதற்கும், இதுகுறித்து பொதுமக்களின் ஆட்சேபனை கோரி இரு நாளிதழ்களில் விளம்பரம் செய்யவும், இதற்கான செலவினம் ரூ.24881/-க்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. தூய்மை நகருக்கான கணக்கெடுப்பு 2023ன்கீழ் இந்நகராட்சி இடம் பெறும் பொருட்டு மேற்படி சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.

   (ந.க.எண்.28/2022/எச்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.182, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.9</u>**

இந்நகராட்சி பகுதிகளில் 24 வார்டுகளில் அமைந்துள்ள 16 சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் 5 பொது கழிப்பிடங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும், பராமரிக்கவும் மேற்படி கழிப்பிடங்களில் ஏதேனும் குறைபாடு இருந்தால், அவற்றை உடனடியாக சரி செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ODF++ தரச்சான்று பெறும் பொருட்டு, தினசரி அனைத்து சமுதாய மற்றும் பொது கழிப்பறைகள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்கும் பொருட்டு, 2023-2024-ம் ஆண்டு தேவைக்கு கிருமிநாசினி கருப்பு பினாயில் 600 லிட்டர் மற்றும் ஆசிட் 300 லிட்டர் தேவைக்கேற்ப அவ்வப்போது வாங்கி கொள்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/H1 நாள்:10.11.2021ல் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீட்டில் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்வதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.65000-க்கும், பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.205/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.183, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.10</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/2017/ஜே-I, நாள்: 28.11.2017 மற்றும் நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடித ந.க.எண். 2920/2014/அ4 நாள்: 20.10.2017, இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 138436/VCII /S2/2023 நாள்:15.02.2023 மற்றும் விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்ட அறிக்கை கடித ந.க.எண்.1723/2020/இ3 நாள்:30.12.2022 ஆகிய அறிக்கையில் அறிவுறுத்தியுள்ளபடி, பூச்சிகளினால் பரவக்கூடிய (Vector borne diseases) வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைப்பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியிருப்பதாலும், இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுப் பகுதிகளிலும் முதிர்கொசுக்களைக் கட்டுப்படுத்தக்கூடிய கொசு ஒழிப்பு புகை பரவவிடக்கூடிய பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளவும் இப்பணிகளுக்குத் தேவையான முதிர்க்கொசு ஒழிப்பு மருந்து Pyrethrum 2% Extract (பைரித்ரம் 2% எக்ஸ்ட்ரக்ட்) உத்தேசமாக 200 லிட்டர் வாங்கிப் பயன்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசு மருத்துவ சேவைக்கழகத்தின் கடித ந.க.எண்.003/M(P)/INSECT-LARVAI/TNMSC/2020 நாள்:31.12.2021-ல் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.1008/-லிட்டர்+GST வரி 18/%-ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s.Paramount Pesticides Limited, Merrut-ல் வாங்குவதற்கும், பொது சுகாதாரத் துறையின் அறிக்கைகளுக்கேற்பவும், நோய்கிருமிகளின் சீதோசன நிலைக்கேற்பவும், அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிப் பயன்படுத்திக்கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் (GST வரி 18%) உடன் சேர்த்து ரூ.2.50 லட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு பணியின் அவசரஅவசியம் கருதியும், பூச்சியினால் பரவக்கூடிய (Vector borne diseases) நோய்களை கட்டுப்படுத்தும் பொருட்டும் 2023-2024ம் ஆண்டுக்கு தேவையான மேற்படி செலவினத் தொகைக்கு அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.206/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.184, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.11</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள 12,678 குடியிருப்புகள், 1309 வணிக நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து தினசரி 10.40 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் தினசரி சேகரமாகிறது. தினசரி நகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்த பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது . இவற்றில் மக்கும் கழிவுகள் - 6.30 மெட்ரிக் டன் மற்றும் மக்காத கழிவுகள் – 4.10 மெட்ரிக் டன் ஆகும்.

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் 5.70 மெட்ரிக் டன் மக்கும் கழிவுகளை இந்நகராட்சியின் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரக்குடில்கள் மூலம் உரமாக்கப்பட்டு வருகிறது. ஆனால் தினசரி சேகரமாகும் 3.80 மெட்ரிக் டன் மக்காத கழிவுகளான பிளாஸ்டிக் கழிவுகள், ரப்பர் கழிவுகள், துணிக்கழிவுகள், கண்ணாடி பாட்டில்கள் உள்ளிட்ட கழிவுகளை கையாள்வது மற்றும் மக்கச்செய்வது பெரும் சவாலாக உள்ளது,

ஆகவே, இந்நகராட்சியில் 24 வார்டுகளில் தினசரி சேகரமாகும் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளை தனியாக சேகரித்து தனியார் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை நிறுவனத்தின் மூலம் சிமெண்ட் ஆலை மற்றும் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் நிறுவனங்களுக்கு அனுப்பும் பொருட்டு மேற்படி பிளாஸ்டிக் கழிவுகளை தினசரி பேலிங் மிசின் மூலம் கட்டு கட்டாக கட்டி உரக்கிடங்கில் சேமித்து வைக்கவும். பேலிங் மிசின் மூலம் பிளாஸ்டிக் கழிவுகளை பிரஸ் பண்ணி கட்டுவதற்கு தேவையான பேக்கிங் ரோப் மற்றும் பேக்கிங் கிளிப் 2023- 2024-ம் ஆண்டு தேவைக்கு வாங்குவதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.60,000/-க்கும், உள்ளூர் விலைப்புள்ளி பெற்று வாங்குவதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.204/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.185, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.12</u>**

அரசாணை (நிலை) எண். 79 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:02.06.2022 மற்றும் திருத்திய அரசாணை (நிலை) எண்.149 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:18.10.2022-ன்படி, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.9514/2023/தூ.இ.தி2 நாள்:13.10.2023 மற்றும் ந.க.எண். 9514/2023/SBM நாள்:04.01.2023-ல் அறிவுறுத்தியுள்ளபடியும், நகரங்களின் தூய்மைக்கான மக்கள் இயக்கம் விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒவ்வொரு மாதமும் 2வது மற்றும் 4வது சனிக்கிழமைகளில் தீவிர தூய்மை பணிகளை மேற்கொள்வதற்கும் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் தூய்மை குறித்து விழிப்புணர்வு பிரச்சாரம் பள்ளி மற்றும் கல்லூரிகளில் செயல்படுத்துவதற்கும், இதற்கு தேவையான விழிப்புணர்வு பொருட்களை அச்சிட்டு தயார் செய்து கொள்வதற்கும், பொது சுகாதாரத்துறை இயக்குநர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், விருதுநகர் துணை இயக்குனர், சுகாதார பணிகள் உள்ளிட்ட அலுவலரிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் உத்திரவு மற்றும் அறிவுரைகளுக்கு ஏற்ப தேவையான விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவதற்கும், விழிப்புணர்வு பொருட்கள் (IEC Materials) தயார் செய்வதற்கும், சுவர் விளம்பரம் வரைவதற்கும் பொது சுகாதாரம், தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் மேலாண்மை, கசடு கழிவு மேலாண்மை, தொற்று நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கும், விழிப்புணர்வு பொருட்கள் (IEC Materials) தயார் செய்வதற்கும், தூய்மைப்பணியாளர்களுக்கு அவ்வப்போது மருத்துவ முகாம் நடத்துவதற்கும், விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்துவதற்கும் தமிழக அரசின் சிறப்பு திட்டங்கள் தொடர்பாக அவ்வப்போது பெறப்படும் அறிவுரைகளுக்கு ஏற்ப விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துவதற்கும் உள்ளூர் விலைப்புள்ளி பெற்று விழிப்புணர்வு பொருள்கள் தயார் செய்து கொள்வதற்கும், இதற்கான 2023-2024ம் ஆண்டிற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 லட்சத்திற்கும் மேற்படி செலவினத்தொகையை பொது நிதியிலிருந்து பயன்படுத்திக் கொள்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரம், தூய்மை இந்தியா திட்டம், திடக்கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் மேலாண்மை, கசடு கழிவு மேலாண்மை, தொற்று நோய்கள் மற்றும் வைரஸ் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகளின் அவசியம் கருதி மேற்படி செலவினத் தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.203/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.186, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக்காலங்களில் ஏற்படும் தொற்று நோய்களை கட்டுப்படுத்தும் பணிக்காகவும், பேருந்து நிலைய பகுதிகளில் அமைந்துள்ள கழிப்பறை மற்றும் வளாகங்களை தினசரி சுகாதாரமாக பாரமரித்திடவும், 24 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறை வளாகங்களை சுகாதாரமாக பராமரித்திடவும், பொதுமக்கள் அதிகமாக கூடும் பேருந்து நிலையங்கள், தினசரி நகராட்சி காய்கறி சந்தைப்பகுதிகள், கோவில் திருவிழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்கள் உள்ளிட்ட பகுதிகளை சுகாதாரமாக பராமரித்துக்கொள்ளும் பணிக்காகவும், கிருமிநாசினி சுண்ணாம்பு பவுடர் பயன்பாட்டிற்காக 10 டன் தேவைப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1.25 இலட்சத்திற்கும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/H1 நாள்:10.11.2021ல் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று தேவைக்கேற்ப அவ்வப்போது கொள்முதல் செய்வதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.202/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.187, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2571/2017/J1 நாள்:28.11.2017, இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2227/VC II/S2/2016 நாள்:28.03.2017, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.20751/J1/2019, நாள்:17.09.209ல் அறிவுறுத்தியுள்ளபடி, இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக் காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், வீடு வீடாகச் சென்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு தேவைப்படுவதாலும், இந்நகராட்சிப் பகுதிகளில் மழைக் காலங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டும், வீடு வீடாகச் சென்று டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு தேவைப்படுவதாலும், இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களான பேருந்து நிலையப்பகுதிகள் மற்றும் நகராட்சி தினசரி சந்தைப்பகுதிகள், கோவில் பகுதிகள் ஆகியவற்றை எப்போதும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும், பராமரிக்கும் பொருட்டும், அவ்வப்போது நடைபெறும் பொதுமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களை சுகாதாரமாகப் பராமரிக்கும் பொருட்டும், மேற்குறிப்பிட்ட இடங்களில் தெளிப்பதற்காகவும், பயன்பாட்டுக்காக கிருமிநாசினி பிளிச்சிங் பவுடர் 4டன் தேவைப்படுகிறது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் கடித ந.க.எண். 23001/ஜே/2019 நாள்:03.10.2019ல் கிருமி நாசினி பிளிச்சிங் பவுடரை மூன்று மாத தேவைக்கான இருப்பை எப்பொழுதும் இருப்பில் வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளபடியாலும், பருவ கால மாற்றத்திற்கு ஏற்பவும், பொதுசுகாதாரப்பணி

தேவைக்கேற்பவும் அவ்வப்போது வாங்கிக் கொள்வதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/H1, நாள்:10.11.2021ல் நிர்ணயிக்கப்பட்ட விலை மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும், பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளுவதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.201/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.188, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.15</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்ட அறிக்கையில், கசடு கழிவு மேலாண்மை (வரையறை) விதிகள் 2022 தொடர்பான புதிய அரசாணை எண்.183, நாள் 31.12.2022 வெளியிடப்பட்டுள்ளதாகவும், மேற்படி அரசாணையில் திறந்த வெளியில் மற்றும் நீர்நிலைகளில் மலக்கசடுகள் மற்றும் கழிவுநீரை பாகுபாடின்றி வெளியேற்றுதல், சுற்றுசூழலுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்துவதால், மலக்கசடுகள் மற்றும் கழிவு நீரின் பாதுகாப்பான வெளியேற்றுதலை உறுதி செய்வதற்கு சரக்குந்துகள், இழுவை வண்டிகள் அல்லது கழிவுநீர் தொட்டிகள் மற்றும் கழிவுநீர் குளங்களின் வெளியேற்றுதலுக்காக, பயன்படும் பிற வாகனங்கள் எதனின் இயக்கம் மற்றும் போக்குவரத்தினை ஒழுங்குமுறைப்படுத்துதல் குறித்தும் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் பாதுகாப்பு முறைகளை கடைப்பிடித்து முறையாக அப்புறப்படுத்துதல், முறையாக கொண்டு செல்லுதல் மற்றும் முறையாக கையாளுதல் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு குறித்தும் பணியாளர்களுக்கு காப்பீடு செய்வது குறித்தும் முறையாக உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்து உரிமம் வழங்குவது குறித்தும் புதிதாக விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளது.bமேற்படி அரசாணை நகர்மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.199/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.189, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.16</u>**

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 2571/2017/ஜே-1 நாள்: 28.11.2017, இயக்குநர் சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.R.No.2227/VCII/S2/2016 நாள்:28.03.2017, நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 20751/ஜே1/2019 நாள்:17.09.2019 மற்றும் ந.க.எண்.23001/ஜே1/2019 நாள்:03.10.2019, விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்த

ஆய்வுக்கூட்ட அறிக்கை கடித ந.க.எண்.1723/2020/இ3 நாள்:30.12.2022 மற்றும் வட்டார மருத்துவ அலுவலர், பொது சுகாதார துறை அவர்களின் கடித ந.க.எண்.05/அஆசுநி/2022 நாள்:10.02.2023 ஆகிய அறிக்கைகளில் அறிவுறித்தியுள்ளபடியும், இந்நகராட்சிக்குட்பட்ட 24 வார்டுப் பகுதிகளிலும், வீடு வீடாகச் சென்று, கொசுப்புழு ஒழிப்புப்பணிகளை மேற்கொள்ளச் செல்லும் களப்பணியாளர்களுக்கு கொசுப்புழு ஒழிப்புப்பணிக்கு, 2023-2024ம் ஆண்டிற்கு கொசுப்புழுக்கொல்லி மருந்து டெமீபாஸ் 50% EC (Temephos Emulsifiable 50% EC) உத்தேசமாக 120 லிட்டர் தேவைப்படுவதாலும், தமிழ்நாடு அரசு மருத்துவ சேவைக்கழகத்தின் கடித ந.க.எண்.003/M(P)/INSECT-LARVAI/TNMSC/2020 நாள்:04.02.2022-ல் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.693.50/-லிட்டர்+GST வரி 18/%ல் விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s.Paramount Pesticides Limited, Merrut-ல் வாங்குவதற்கும், பொது சுகாதாரத் துறையின் அறிக்கைகளுக்கேற்பவும், நோய்கிருமிகளின் சீதோசன நிலைக்கேற்பவும், அவ்வப்போது தேவைக்கேற்ப வாங்கிப் பயன்படுத்திக் கொள்வதற்கும், இதற்கான உத்தேச செலவினம் (GST வரி 18%) உடன் சேர்த்து ரூ.1.00 லட்சத்திற்கும், பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளுவதற்கும் மன்ற அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.200/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.190, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.17</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் டாடா ஏஸ் TN 67 BJ 8661-க்கு கியர் பாக்ஸ் பழுதடைந்ததால் பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

| **வ.எண்** | **நிறுவனத்தின் பெயர்** | **விலைப்புள்ளித் தொகை** |
|---|---|---|
| 1 | ராஜா மோட்டார் ஓர்க்ஸ், சாத்தூர் | ரூ.9300 |
| 2 | ஸ்ரீ பாண்டியன் ஆட்டோ கேரேஜ் சாத்தூர் | ரூ.9400 |

மேற்படி ஒப்புநோக்கு பட்டியலில் ராஜா மோட்டார் ஓர்க்ஸ், சாத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1. பொது சுகாதாரப்பிரிவு டாடா ஏசி TN67BJ 8661-க்கு கியர் பாக்ஸ் பழுதடைந்ததால் பழுதுநீக்கம் செய்யும் பணிக்கு பொதுசுகாதார அவசரஅவசியம் கருதி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள ராஜா மோட்டார் ஓர்க்ஸ், சாத்தூர் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.0060/2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.191, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.18</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வெம்பகோட்டை சாலையில் உள்ள சர்வே எண்.138,139 மற்றும் 140-ல் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படவுள்ளது. பேருந்து நிலையம் அமைவிடத்தில் மண் பரிசோதனை செய்யும் பொருட்டு அரசு பொறியியல் கல்லூரி திருநெல்வேலி அவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அதற்கான கட்டண தொகை ரூ.35,400 மற்றும் செலவு தொகை ரூ.31,000/-னை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

பணியின் அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 322/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.192, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.19</u>**

சாத்தூ நகராட்சியினால் தை திருநாளுக்கு மறுநாள் காணும் பொங்கல் அன்று சாத்தூர் நகர் மக்கள் மற்றும் அருகில் உள்ள கிராம மக்கள் மணல் மேட்டு திருவிழாவாக வைப்பாற்று கரையில் கொண்டாடி வருகிறார்கள். தற்போது கொரோனா தொற்று இருப்பதால் மக்கள் ஒரே இடத்தில் கூடுதலை தவிர்க்கும் பொருட்டு நகர்பகுதியில் உள்ள 5 பூங்காவில் மணல் மேட்டு திருவிழாவை கொண்டாடும் வகையில் அலங்கார விளக்குகள் அமைக்கும் பொருட்டு 2 விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டபடி விலைப்புள்ளி பெறப்பட்டது.

1. சுல்தானியா சவுண்ட் சர்வீஸ் - ரூ. 45750.00
2. ரோஜா ஆடியோஸ் & ஜாஸ்மின் லைட்டிங்க் - ரூ. 51025.00

<u>அலுவலக குறிப்பு:</u>

பெறப்பட்ட விலைபுள்ளியில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள சுல்தானியா சவுண்ட் சர்வீஸ் விலைப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 966/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.193, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.20**

சாத்தூ நகராட்சி இருக்கண்குடி நீர்தேக்கத்தில் Unit - II -ல் உள்ள 12.5 HP Sump motor பழுதடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ளுவதற்கு 07.02.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s . கங்கா எலக்ட்ரிக்ல்ஸ் - ரூ. 47540.00
2. M/s. மகேஸ்வரி எலக்ட்ரிக்ல்ஸ் - ரூ. 49980.00

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள M/s.கங்கா எலக்ட்ரிக்ல்ஸ் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 923/2022/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.194, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.21**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள மினிபவர் பம்ப் மோட்டார்கள் பழுது மற்றும் பராமரிப்பு பணி செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 151/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.195, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி குடிநீர் விநியோக பராமரிப்பு ,குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பம்ப் மெயின் லையன்கள் உடைப்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.148/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.196, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பைபாஸ் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மோட்டார் பம்புகள், கழிவுநீர் உந்து நிலைய மோட்டார் பம்புகள் மற்றும் இருக்கண்குடி நீர் உந்து நிலைய மோட்டார் பம்புகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.150/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.197, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24**

சாத்தூர் நகராட்சி பகுதியில் தினசரி பாதாள சாக்கடைகளில் ஏற்படும் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.,8,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 146/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.198, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.25**

சாத்தூ நகராட்சி பகுதியில் உள்ள அடிபம்பு மற்றும் விசைபம்புகளை பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளுவதற்கு போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.6,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.147/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.199, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.26**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பணிகளுக்கு லிக்யூடு குளோரின் சப்ளை செய்யும் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.9,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.149/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.200, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.27</u>**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண்.(MS)18, நாள்:13.02.2023 சாத்தூர் நகராட்சி பகுதியில் புதியதாக செயல்படுத்தப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்டத்தில் வீட்டு இணைப்புகளை Internal Plumbing வழியாக 6500 இணைப்புகள் ரூ.450.00 இலட்சம் மதிப்பீட்டில் எடுத்து செய்ய நகர்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்ட நிதியின் மூலம் மேற்கொள்ள அரசு அனுமதித்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>அலுவலக குறிப்பு</u>

தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி பெற பணியின் அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று திட்ட மதிப்பீட்டினை சமர்ப்பிக்கப்பட்டதற்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 155/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.201, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.28</u>**

சாத்தூர் நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டபணிகள் குறித்த விவரங்களை சாதனை மலரில் விளம்பரம் செய்தவைக்கு விளம்பர கட்டணம் ரூ.6,000/-னை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.322/2018/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.202, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.29</u>**

சாத்தூர் நகராட்சி இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் உள்ள மின்மோட்டார்கள் பழுதடைந்து நீர் உறிஞ்சும் குழாய்கள் முற்றிலும் உடைந்து குடிநீர் பம்பிங் செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே அதனை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள 03.01.2023-ம் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.ஞானசேகரன் - 0.14% மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் - 0.4% மதிப்பீட்டை விட அதிகம்

<u>அலுவலக குறிப்பு</u>

குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.644/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.203, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.30**

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஈப்பு வாகனம் TN67 BA 5926 வண்டிக்கு காலமுறை பராமரிப்பு பணியினை விருதுநகர் PPS மோட்டார் பிரைவேட் லிமிடெட் மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகையினை வழங்கவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்.
2. இஞ்சின் ஆயில் சர்வீஸ் செய்து ஆயில் பில்டர், டீசல் பில்டர்கள் புதியது மாற்ற வேண்டும்.
3. 4-வீல் பேரிங் செக்கப் செய்து கீரிஸ் பேக்கிங் செய்ய வேண்டும்.
4. பிரேக் செக்கப் செய்து பிரேக் பேடு (பிரேக் சூ) புதியது மாற்ற வேண்டும்.
5. ஓட்டுனர் சீட்டு, ஆணையர் சீட்டு முன்பகுதிகள் 2 சீட்டு பாஞ்ச் வைத்து மாட்ட வேண்டும்.
6. 2 லட்சத்தி 15 ஆயிரத்திற்கான பணிகள் செய்ய வேண்டும்.
7. வீல் அலாய்மெண்ட் பார்க்க வேண்டும்.

அலுவலக குறிப்பு:

விருதுநகர் PPS மோட்டார் பிரைவேட் லிமிடெட் மகேந்திரா & மகேந்திரா நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளவும் அதற்கான செலவின தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 79/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.204, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.31**

சாத்தூர் நகராட்சியினால் 2021-2022-ம் ஆண்டிற்கு கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான மயானத்தில் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவு பெற்றவுடன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு அதனை தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான கட்டணத்தினை நிர்ணயம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

புதியதாக அமைக்கப்படவுள்ள நவீன எரிவாயு தகன மேடையினை தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான கட்டணத்தினை நிர்ணயம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 608/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.205, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.32</u>**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வடக்கு ரத வீதியில் புதியதாக கட்டப்பட்ட கழிப்பறையில் ஆழ்துளை கிணறு மற்றும் மின்வசதிகள் மேற்கொள்ளும் பணியினை செய்ய 20.01.2023-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.சுந்தரமகாலிங்கம் - 0.31% மதிப்பீட்டை விட குறைவு
2. திரு.முத்துசாமி - 0.33% மதிப்பீட்டை விட அதிகம்

<u>அலுவலக குறிப்பு:</u>

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.சுந்தரமகாலிங்கம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.42/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.206, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.33</u>**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 25HP Sub Motor-க்கு 10 Sq.mm முற்றிலும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் உள்ளது. எனவே 3Core Cable 72mtr வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.33,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.45/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.207, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.34</u>**

இந்நகராட்சியினால் வெம்பக்கோட்டை தாயில்பட்டி சாலையில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு திட்ட வரைபடம் மற்றும் திட்ட மதிப்பீடு தனியார் நிறுவனத்தின் மூலம் தயார் செய்யும் பொருட்டு 15.12.2022-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1. Pavithra Associated - 1.72%
2. Design Spectrum - 1.82%
3. Prorata IN- Propotion - 1.87%

அலுவலக குறிப்பு:

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள Pavithra Associated அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை திட்ட பணியின் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.288/2022/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.208, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.35**

சாத்தூர் நகராட்சியினால் 2022-2023-ம் ஆண்டிற்கு 15வது நிதிக்குழு (Tied) திட்டத்தின் கீழ் ரூ.44.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வழிகாட்டுதலின்படி 50 சதவீதம் குடிநீர் பணிக்கும் 50 சதவீதம் திடக்கழிவு மேலாண்மை பணிக்கும் முன்னுரிமைகள் வழங்கி பணியினை மேற்கொள்ளப்பட வேண்டும். அதன்படி கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கு.

| திடக்கழிவு மேலாண்மை பணிகள் | | |
|---|---|---|
| வ. எண். | பணி விவரம் | மதிப்பீடு தொகை ரூ.இலட்சத்தில் |
| 1 | நகராட்சி பகுதிக்குட்பட்ட மேலக்காந்தி நகரில் உள்ள நம்ம கழிப்பறை, மாடமாளி கை எதிர்புறம் உள்ள கீழக்காந்தி நகரில் உள்ள கழிப்பறை மற்றும் மேலக்காந்தி நகர் ஆர்.சி தெற்கு தெருவில் உள்ள கழிப்பறையினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ. 9.00 |
| 2 | நகராட்சி பகுதிக்குட்பட்ட SMC காலணி வடக்கு ரத வீதி, தெற்கு ரத வீதி, ஆர்.சி வடக்கு தெரு, காமராஜபுரம் பெண்கள் கழிப்பறை மற்றும் குருலிங்காபுரம் பெண்கள் கழிப்பறையினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ. 9.00 |
| 3 | நகராட்சி பகுதிக்குட்பட்ட காமராஜபுரம் ஆண்கள் கழிப்பறை மற்றும் பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கழிப்பறையினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ. 4.00 |
| | மொத்தம் | ரூ. 22.00 |

| குடிநீர் பணிகள் | | |
|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் 25 எச்.பி நீர்மூழ்கி மோட்டார் பொருத்துதல் | ரூ. 5.00 |
| 2 | நகராட்சி இருக்கண்குடி நீர் உந்து நிலையத்தில் 25 எச்.பி பம்ப் மற்றும் மோட்டார் வாங்கி பொருத்துதல் | ரூ. 9.00 |
| 3 | நகராட்சி பகுதிக்குட்பட்ட பைபாஸ் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் வாழவந்தாள்புரம் நீர்தேக்க தொட்டியினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | ரூ. 8.00 |
| | மொத்தம் | ரூ. 22.00 |

அலுவலக குறிப்பு:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(ந.க.எண். 197/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.209, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.36**

சாத்தூர் நகராட்சியில் 2023-2024-ம் ஆண்டிற்கு நகராட்சி மூலம் புதிதாக வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கிட அரசாணை எண்.97/12.07.2007-ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். 748/08 குடிநீர் வழங்கல் துறை நாள்:21.09.2009-ன்படியும் நடப்பாண்டான 2023-2024-க்கு ஏப்ரல் 2023 முதல் புதிதாக பெறப்படும் குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்பங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பதிவுக்கட்டணம் | ரூ.110/- |
| 2. | **வைப்புத் தொகை**<br>அ) வீட்டு பயன்பாடு<br>ஆ) வீட்டு பயன்பாடல்லாதவை | <br>ரூ 7000/-<br>ரூ 16,000/- |

**சாலை சீரமைப்பு கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ | தார்சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
| | | கட்டணம் | கட்டணம் | கட்டணம் |
| | 0-30 மீட்டர் நீளத்திற்கு | 2100/- | 4475/- | 5175/- |
| | 30-90 மீட்டர் நீளத்திற்கு | 3475/- | 5670/- | 6370/- |
| **மேற்பார்வைக் கட்டணம்** | | | | |
| 4. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ | தார்சாலை ரூ. | சிமெண்ட் சாலை ரூ. |
| | | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) |
| | 0-30 மீட்டர் நீளத்திற்கு | 555/- | 1180/- | 1360/- |
| | 30-90 மீட்டர் நீளத்திற்கு | 915/- | 1490/- | 1460/- |
| 5. | ஆய்வுக் கட்டணம் | | | ரூ. 1750/- |

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.213/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.210, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.37**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.423/செ.ம.தொ.அ/2022 நாள்:23.11.2022-ன்படி சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மூன்று இடங்களில் மாற்றுதிறனாளிகள் நலத்துறையின் கீழ் புதிய திட்டம் செயல்பாடு குறித்த விளம்பர பலகையினை நிறுவிய வகைக்கு செலவு தொகை ரூ.9,000/-னை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.211, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.38**

விருதுநகர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.423/செ.ம.தொ.அ/2022 நாள்:23.11.2022-ன்படி சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மூன்று இடங்களில் தைத்திங்கள் திருநாளில் தமிழர் பெருமை பண்பாட்டு குறித்து விளம்பர பலகையினை நிறுவிய வகைக்கு செலவு தொகை ரூ.8,500/-னை வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்றத் தீர்மானம் எண்.212, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.39**

சாத்தூ நகராட்சி பகுதியில் 2020-2021 மற்றும் 2022-2023-ம் ஆண்டு TURIP திட்டத்தின் கீழ் புதியதாக அமைக்கப்பட்ட சாலைகளின் இருபுறமும் வெள்ளை கோடுகள் மற்றும் வேகத்தடையினை இரவு நேரங்களில் தெரியும் வகையில் வெள்ளை கோடு அடிக்கவும் அதற்கான உத்தேச தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.214/2023/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.213, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.40**

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட மாரியம்மன் கோவில் தெருவில் புதிய பாதாள சாக்கடை திட்டத்தினால் சேதமடைந்த சாலையினை பங்குனி பொங்கல் திருவிழாவினை முன்னிட்டு சீரமைத்து தர நகர்மன்ற உறுப்பினரால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு சாலையை சீரமைக்க உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 191/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.214, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.41</u>**

சாத்தூர் நகராட்சியினால் அரசு கட்டிடங்கள், குடியிருப்பு கட்டிடங்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டு குடிநீர் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. இதில் கீழ்க்கண்ட அரசு கட்டிடங்கள், துண்டிப்பு செய்யப்பட்ட இணைப்புகள் மற்றும் நீண்ட காலமாக குடிநீர் கட்டணம் செலுத்தாத இணைப்புகளுக்கான கேட்பு தொகையினை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்து நிரந்தரமாக வரி விதிப்பு எண்களை நீக்கம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | குடிநீர் இணைப்பு விவரம் | கேட்பு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | சென்ட்ரல் எக்ஸைஸ் அலுவலக குடியிருப்பு கட்டிடத்திற்கு நகராட்சியினால் 16 குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் 15 இணைப்புகளை நிரந்தரமாக துண்டிப்பு செய்யக்கோரி 14.04.2020-ல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பொருட்டு குடிநீர் குழாய் இணைப்பு துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால் கணினியில் நீக்கம் செய்யப்படாததால் தொடர்ந்து 2 ஆண்டுகளாக கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. எனவே 15 இனங்களுக்கான கேட்பு தொகை (2021 முதல் 2023 வரை) | 36360 |
| 2 | ஆர்.டி.சி.சி வங்கி (2003 முதல் 2023 வரை) | 40368 |
| 3 | ஜீனியர் இன்ஜினியர் குடியிருப்பு பொது பணித்துறை (2005 முதல் 2023 வரை) | 17778 |
| | **மொத்தம்** | 94506 |

| | **மின்மோட்டார் பொருத்தி குடிநீர் இணைப்பு உள்ள துண்டிப்பு செய்யப்பட்ட குடியிருப்பு கட்டிட விவரம்** | | ரூ. |
|---|---|---|---|
| வ.எண் | பெயர் | இணைப்பு எண் | |
| 1 | பி.தாசன் | 128/358 | 7272 |
| 2 | வீராச்சாமி ராஜேஸ்வரி | 128/678 | 8610 |
| 3 | தியாகராஜன் | 128/676 | 7272 |
| 4 | மனோவா | 128/729 | 7272 |
| 5 | பத்மாவதி | 128/6291 | 7272 |
| 6 | A.R. மலைராஜன் | 128/605 | 2424 |
| 7 | A.R. மலைராஜன் | 128/632 | 2424 |
| 8 | ஆவுடையப்ப கோனார் | 128/1289 | 5757 |
| 9 | இ. சின்னராஜா | 128/5106 | 9090 |
| 10 | முத்துராமலிங்கம் சக்திவேல் | 128/5358 | 7872 |
| 11 | சுந்தரம்மாள் | 128/3300 | 8484 |
| 12 | அண்ணாமலை நாடார் | 128/2152 | 6660 |

| | | | |
|---|---|---|---|
| 13 | முருகன் | 128/2749 | 4824 |
| 14 | அய்யனார் | 128/2951 | 6666 |
| 15 | சித்திரவேல் | 128/2749 | 4824 |
| 16 | வேலாயுதம் | 128/3298 | 7272 |
| 17 | சமயகருப்பசாமி | 128/3201 | 6969 |
| 18 | நடசேன் & கோ | 128/3153 | 14472 |
| 19 | கலாவதி | 128/3831 | 7272 |
| | **மொத்தம்** | | 132708 |
| | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் காணொளி காட்சி ஆய்வு கூட்டத்தில் நீண்ட காலமாக குடிநீர் கட்டண தொகையை செலுத்தாத இணைப்புகளை துண்டிப்பு செய்து கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய அறிவுறுத்தப்பட்டதால் கீழ்க்கண்ட இணைப்புகளை துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. அதனை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்படும் விவரம் | | |
| வ.எண் | பெயர் | இணைப்பு எண் | ரூ. |
| 1 | வெங்கட்ராம நாயக்கர் | 128/471 | 9576 |
| 2 | லலிதா | 128/634 | 6060 |
| 3 | லெட்சுமி | 128/645 | 6060 |
| 4 | சுப்பிரமணியம் | 128/482 | 4242 |
| 5 | தங்கபாண்டியன் | 128/832 | 10281 |
| 6 | சவுந்தராஜன் | 128/908 | 9576 |
| 7 | கருப்பயா தேவர் | 128/953 | 7272 |
| 8 | காளிமுத்து | 128/1044 | 14472 |
| 9 | வெங்கடசாமி | 128/1135 | 8181 |
| 10 | சிவஜோதி | 128/1188 | 7272 |
| 11 | கருப்பசாமி மாரியம்மாள் | 128/1532 | 7272 |
| 12 | சக்தி முருகன் | 128/1735 | 9576 |
| 13 | கருப்பையா செட்டியார் | 128/2256 | 8484 |
| 14 | அசோக் பாபு | 128/2113 | 7272 |
| 15 | எஸ்.டி.ஹத்துள் | 128/2264 | 6660 |
| 16 | ஆல்பர்ட் | 128/2419 | 9576 |
| 17 | தனிஸ்லாஸ் பில்டிங் | 128/2641 | 11520 |
| 18 | அருண் | 128/2659 | 6060 |
| 19 | அரவிந்தன் | 128/2661 | 7272 |
| 20 | பேச்சியம்மாள் | 128/2682 | 19785 |
| 21 | ராஜேந்திரன் | 128/2861 | 9576 |
| 22 | பி.டி. பொன்னையா நாடார் | 128/2876 | 8610 |
| 23 | அமிர்தலிங்கம் | 128/5470 | 6363 |

| | | | |
|---|---|---|---|
| 24 | சிவசங்கரன் | 128/2907 | 7272 |
| 25 | பாண்டியராஜன் | 128/3019 | 9576 |
| 26 | சரோஜா | 128/2980 | 9576 |
| 27 | எம்.முத்து | 128/3415 | 7575 |
| 28 | சிதம்பர செட்டியார் | 128/3122 | 9333 |
| 29 | மாரியம்மாள் | 128/3139 | 9333 |
| 30 | கஸ்தூரி பாய் | 128/3170 | 10548 |
| 31 | சுப்பிரமணியன் | 128/6047 | 9576 |
| 32 | விசாலாட்சி | 128/3817 | 9576 |
| 33 | ராஜேந்திரன் | 128/3779 | 7272 |
| 34 | நாதமுனி நாயுடு | 128/3966 | 9576 |
| 35 | நிர்வாக அதிகாரி வெங்கடாசலபதி திருக்கோவில் | 128/4529 | 14472 |
| 36 | நிர்வாக அலுவலர் | 128/3844 | 9333 |
| 37 | நிர்வாக அலுவலர் | 128/4026 | 7272 |
| | **மொத்தம்** | | **331308** |

அலுவலக குறிப்பு:

அ) அரசு கட்டிடங்களுக்குண்டான குடிநீர் கேட்பு தொகை ரூ-94506 -னை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) குடிநீர் குழாய் இணைப்புகள் துண்டிப்பு செய்யப்பட்ட பின்பு தவறுதலாக எழுப்பபட்ட கேட்பு தொகை ரூ.132708-னை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

இ) நிலுவை தொகைக்காக துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்பிற்கான கேட்பு தொகை ரூ.331308 கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஈ) மேற்கண்ட இணைப்புகளுக்கான வரிவிதிப்பு எண்களை கேட்பு பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 188/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.215, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.42**

சாத்தூர் நகராட்சியினால் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற குடியிருப்பு கட்டிடம் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்ற குடியிருப்பு கட்டிடம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. குடியிருப்பு கட்டிடங்களுக்கு நகராட்சியினால் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு இணைப்புகளும் சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக குடிநீர் இணைப்புகளில் குடிநீர் கிடைக்கப்பெறவில்லை. இதனால் நீண்ட காலமாக குடிநீர் கட்டண தொகையும் வசூல் செய்யப்படவில்லை. இதனை பொறியாளர் மற்றும் தண்ணீர் பணி பார்வையாளர் அதனை ஆய்வு செய்யப்பட்டதில் இவ்விரு இணைப்புகளுக்கு செல்லும் குழாய்கள் தூர்ந்து போய் சேதமடைந்து மர வேர்கள் உள்நுழைந்து அடைப்பு ஏற்பட்டதால் குடிநீர் கிடைக்காமல் உள்ளது. எனவே நீதிமன்ற குடியிருப்பு கட்டிடங்களுக்கு புதியதாக குழாய்கள் பதித்து

குடிநீர் கிடைத்த பின்பு 2023-2024 முதல் கேட்பு எழுப்பப்பட்டு வசூல் செய்யலாம். எனவே குடிநீர் வழங்கபடாத காலத்திற்க்கு தற்போது வரை கீழ்க்கண்ட இணைப்புகளுக்கு எழுப்பபட்ட கேட்பு தொகையினை தள்ளுபடி செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | குற்றவியல் பிரிவு 2 நீதிமன்றம் குடியிருப்பு கட்டிடம் வரிவிதிப்பு எண் 128/4515 (1999 முதல் 2023 வரை) | 45921 |
| 2 | சப்மேஜிஸ்திரேட் குடியிருப்பு வரிவிதிப்பு எண் 128/2153 (1998 முதல் 2023 வரை) | 20049 |

அலுவலக குறிப்பு:

நீதிமன்ற குடியிருப்பு கட்டிடங்களுக்கு குடிநீர் கிடைக்காத காரணத்திற்காக மேற்கண்ட கேட்பு தொகையினை நீக்கம் செய்து புதியதாக குடிநீர் குழாய் பதித்து குடிநீர் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 188/2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.216, நாள்: 27.03.2023**

**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.43**

சாத்தூர் நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி மூலமாக 01.09.2021 முதல் 31.08.2022 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது ஒப்பந்தகாலம் முடிவடையும் நிலையில் உள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் நகராட்சிகளில் உள்ள குடிநீர் பணி, பாதாளச் சாக்கடை பணிகள், பொது சுகாதார பணிகள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை போதிய நிரந்தர பணியாளர்கள் இல்லாததால் தனியார் நிறுவனங்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் எவரும் இல்லாத நிலையில் அரசினால் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்ததாரரை நியமனம் செய்யும் வரை ஏற்கனவே பார்த்து வரும் ஸ்ரீகங்கா எலக்ட்ரிக்ல்ஸ் திருநெல்வேலி நிறுவனத்திற்கு 31.08.2023 வரை ஐந்து மாதங்களுக்கு மட்டும் கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

அ) தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரருக்கே ஐந்து மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க இந்நகர்மன்ற தீர்மான எண்.149 நாள்:26.12.2022-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆ) தற்போது அளிக்கப்பட்ட கால அவகாசம் முடிவடைவதால் மேலும் ஐந்து மாதங்களுக்கு ஆக்ஸ்ட் 2023 வரை கால நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்கவும், மேற்கண்ட பணியினை 2021-2022-ம் ஆண்டிற்கு ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலை விகிதத்திற்கே பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) ஐந்து மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்தாலும் அரசினால் இடைப்பட்ட காலத்தில் தனியார் நிறுவனத்திற்கு ஒப்பந்தம் உரிமம் வழங்கும் பட்சத்தில் பழைய ஒப்பந்தக்காரர் மறுப்பு ஏதும் தெரிவிக்காமல் தமது ஒப்பந்த காலத்தினை முடித்து கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 957/2019/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.217, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.44</u>**

சாத்தூ நகராட்சியினால் 2014-15-ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் இருந்து வடக்கு ரத வீதியில் சிறுநீர் கழிப்பறை அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்ட போது மேற்கண்ட பணியை செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து நியூ தனலெட்சுமி தியேட்டர் உரிமையாளர் திரு.திருவேங்கடசாமி அவர்களால் சென்னை உயர்நீதிமன்றக்கிளை மதுரையில் வழக்கு எண். WP (MD) 3928/15 தொடரப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.எம்.கண்ணன் ஆஜராகவும், அதற்கான செலவுத் தொகை ரூ.15,000-க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண். 1413/2014/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.218, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.45</u>**

சாத்தூர் நகராட்சியின் 2023-2024ம் ஆண்டு வரவு செலவு உத்தேச திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.457/2013/பி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.219, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.46</u>**

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 பிரிவு 15(Y) 16(1)(C), 21(3)-ன் படி பொது சுகாதார பிரிவில் அன்றாடம் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்வதற்கு தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் 2019-2020 ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்சமயம் கையிருப்பு இல்லாத காரணத்தால் பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட விவரப்படி பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாட சாமான்கள் தேவைப்படுகிறது.

| வ. எண் | தளவாடச் சாமன்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 5 அடி மூங்கில் கம்புடன் பெரிய தூப்பு தென்னை குச்சிமாறு | 150 |
| 2 | தென்னை ஈக்கி கைமாறு | 200 |
| 3 | பெரிய மண்வெட்டி பைப் கனணயுடன் | 20 |
| 4 | 5 அடி பைப்பு கனணயுடன் கூடிய 4 பல் கொண்ட முள் வாங்கி | 20 |
| 5 | 5 அடி பைப்பு கனணயுடன் கூடிய 6 பல் கொண்ட முள் வாங்கி | 20 |
| 6 | கல்கத்தா வாளி (சிறியது) | 10 |
| 7 | 6 அடி உயரம் வாறுகால் சுரண்டி பைப் கனணயுடன் | 40 |
| 8 | கைத்தகடு நாகத்தகடு (9x6) | 30 |
| 9 | உருக்கு அறுவாள் | 6 |
| 10 | உருக்கு தொரட்டி 6 அடி கல் மூங்கில் கம்புடன் | 6 |
| 11 | இரும்பு தட்டு | 30 |
| 12 | சுண்ணாம்பு வைக்கும் கூடை | 20 |
| 13 | வாறுகால் அகப்பை 5 நாகத் தகடு | 100 |
| 14 | 5 அடி மூங்கில் கம்புடன் ரோடு தூப்புக்கு பிரசு | 30 |
| 15 | களை வெட்டி | 10 |
| 16 | நைலான் தட்டு | 60 |
| 17 | கையுறை (சிந்தெடிக்) | 200 செட் |
| 18 | ஒளிரும் சட்டை (Reflecting Jacket) | 50 |

மேற்குறிப்பிட்ட தளவாட சாமன்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்களை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10608/2021/H2 நாள்:10.11.2021-ல் நிர்ணயம் செய்துள்ள விலைமதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் இதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.4.25 லட்சத்திற்கும் பொது நிதியிலிருந்து செலவினத்தை மேற்கொள்ளுவதற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதாரப்பணி மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அவசர அவசியம் கருதியும் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும் 2023-2024 ஆம் ஆண்டு பயன்பாட்டிற்காக தூய்மை பணிக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண். /2023/H1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.220, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.47</u>

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட காமராஜபுரம் கார்னேசன் கிளப் ரோட்டில் அமைந்துள்ள வணிக வளாகக்கடை கட்டிடம் பழுதடைந்து இடிந்துவிழும் ஆபத்தான நிலையில் இருந்ததால் 17.12.2021ம் தேதிய இந்நகராட்சி பொறியாளரிடம் குறிப்பு பெற்று குத்தகைதாரர்களுக்கு கடையை காலி செய்ய அறிவிப்பு அனுப்பப்பட்டது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட குத்தகைதாரர்கள் கடைகளை பூட்டி சாவியை நகராட்சி வசம் ஒப்படைத்துவிட்டனர்.

அதைப்போன்று ஆர்.சி. வடக்குத் தெருவில் அமைந்துள்ள கறிக்கடை கட்டிடமும் பழுதடைந்து ஆபத்தான நிலையில் இருந்ததால் பழுதடைந்த கடைகளின் குத்தகைதாரர்களுக்கு கடையை காலி செய்ய அறிவிப்பு வழங்கப்பட்டதில் குத்தகைதாரர்கள் கடையை காலி செய்து கடையை நகராட்சி வசம் ஒப்படைத்து விட்டனர். மேலும் 2020-2021ம் ஆண்டில் கோவிட்-19 கொரோனா பரவியதால் மேற்கண்ட கடைகளுக்கான கேட்பு நிலுவைத் தொகைகளை வசூல் செய்ய இயலாத நிலையில் இருந்ததால் மேற்கண்ட கடைகளின் குத்தகைதாரர்கள் பெயரில் இருந்த முன்வைப்புத் தொகையில் இருந்து வாடகையை ஈடுசெய்யப்பட்டது. ஈடுசெய்யப்பட்டது போக மீதமுள்ள கேட்புத்தொகை தொடர்ந்து நிலுவையாக இருந்து வருவதால் மீதமுள்ள கேட்புத் தொகையினை மன்றத்தின் அனுமதி பெற்று நீக்கம் செய்யவும். மேலும் பெருமாள் கோவில் வடக்கு தெருவில் அமைந்துள்ள திரு.ராமையா பாண்டியன் என்பவரின் கடைக்கான வரிவிதிப்பு எண்.128/117 பூட்டி வைக்கப்பட்டுள்ளதால் கடை வாடகை தொகையை குத்தகைதாரரிடம் வசூல் செய்ய இயலவில்லை. மேலும் கடையை தொடர்ந்து என்னால் நடத்த இயலாது என குத்தகைதாரர் தனது உரிமத்தை ரத்து செய்ய மனு கொடுத்துள்ளார். மேலும் 2022-2023ம் ஆண்டுக்கான கடை வாடகைத் தொகை கணினியில் பதிவேற்றம் ஆகியுள்ளதால் இவற்றினையும் மன்றத்தின் அனுமதி பெற்று கணினியில் இருந்து நீக்கம் செய்ய வேண்டும் மற்றும் 2020-2021ம் ஆண்டு பேருந்து நிலைய கட்டணக் கழிப்பறை ஆண்டு குத்தகைக்கு திரு.எஸ்.அடைக்கலமுத்து என்பவர் ரூ.2,99,850/-க்கு குத்தகை எடுத்து நடத்தி வந்த நிலையில் கோவிட்-19 கொரோனா காலத்தில் பயன்பாடு இல்லாததினாலும், கட்டிடம் பழுதடைந்து இடிந்த நிலையில் இருந்ததாலும் பூட்டி சீல் வைக்கப்பட்டது. 2020-2021ம் ஆண்டுக்கான கேட்புத் தொகை ரூ.2,99,850/- கணினியில் பதிவேற்றம் ஆகியுள்ளதால் அதனையும் மன்ற அனுமதி பெற்று நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது-

| வ.எண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் கடைகள் விபரம் | கேட்பு நிலுவைத் தொகை ரூ. |
|---|---|---|---|
| | ஆர்.சி. வடக்குத் தெரு | | |
| 1 | 128/23 | திரு.சமுத்திரபாண்டியன் கடை எண்.3 | 52092 |
| 2 | 128/28 | திரு.கருப்பசாமி கடை எண்.8 | 54240 |
| 3 | 128/62 | திரு.ஜான்பீட்டர் கடை எண்.1 | 21836 |
| 4 | 128/63 | திரு.சார்லஸ் கடை எண்.2 | 2161 |

| | | | |
|---|---|---|---|
| | **காமராஜபுரம் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ்** | | |
| 1 | 128/99 | **திரு.சமுத்திரபாண்டியன்**<br>**கடை எண்.1** | 744 |
| 2 | 128/103 | **திரு.மாரியப்பன்**<br>**கடை எண்.3** | 1268 |
| 3 | 128/105 | **திரு.பெரியசாமி**<br>**கடை எண்.12** | 15762 |
| 4 | 128/108 | **திரு.சூரங்காந்தி**<br>**கடை எண்.23** | 1638 |
| 5 | 128/136 | **திரு.பொன்மாரி**<br>**கடை எண்.21** | 10230 |
| 6 | 128/148 | **திரு.கருப்பசாமி**<br>**கடை எண்.11** | 6587 |
| | **பெருமாள் கோவில் வடக்கு ரத வீதி** | | |
| 1 | 128/117 | **திரு.ராமையா பாண்டியன்** | 56677 |
| | **பேருந்து நிலைய கட்டணக் கழிப்பறை** | | |
| 1 | 128/BD01/00007 | **திரு.எஸ்.அடைக்கலமுத்து** | 299850 |
| | | **மொத்தம்** | **523085** |

<u>அலுவலகக் குறிப்பு</u>

**மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந.க.எண்.1064/2017/சி2)**

**நகர்மன்றத் தீர்மானம் எண்.221, நாள்: 27.03.2023**

**தீர்மானம்:**

**<u>பொருள் எண்.48</u>**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆட்டுச்சந்தை நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2023-2026ம் ஆண்டிற்கு மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 15.03.2023ம் தேதி மறுபொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கீழ்க்கண்ட விபரத்தின்படி கலந்து கொண்டவர்களில் உச்ச ஏலக்கேள்வி தொகையினை முடிவு செய்யயும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | குறைவு | கூடுதல் |
| 1 | திரு.B. ஈஸ்வரன்,<br>14, சிவன் கோவில் தெரு,<br>சாத்தூர். | 61100 | -- |
| 2 | திரு.V.சுப்பையா பாண்டியன்,<br>த/பெ.வேலுச்சாமி,<br>4, பெருமாள் கோவில் தெற்கு ரத வீதி,<br>சாத்தூர். | -- | 61150 |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் திரு.B.ஈஸ்வரன் என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ.61,100/-ஐ விட திரு.V.சுப்பையா பாண்டியன் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.61,150/- கூடுதலாக இருப்பதால் மேற்படி பொது ஏலக்கேள்வி தொகையினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.222, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண்.49**</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஆடுவதை செய்யும் இடத்தில் நுழைவுக்கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 2023-2026ம் ஆண்டிற்கு மூன்றாண்டு குத்தகை இனத்திற்கு 15.03.2023ம் தேதி மறுபொதுஏலம் மற்றும் மறுஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை. பொது ஏலத்தில் மட்டும் கீழ்க்கண்ட விபரத்தின்படி கலந்து கொண்டவர்களில் உச்ச ஏலக்கேள்வி தொகையினை முடிவு செயய்யும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது

| ‘வ. எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி தொகை ரூ. | |
|---|---|---|---|
| | | குறைவு | கூடுதல் |
| 1 | திரு.K.சரவணன், த/பெ.கருப்பசாமி,<br>107, சிவன்கோவில் வடக்கு ரத வீதி,<br>சாத்தூர். | 2,11,000 | -- |
| 2 | திரு.K.பாஸ்கரன்,<br>910/ASR, நாயுடு நகர், சாத்தூர். | 2,11,100 | -- |
| 3 | திரு.A.சக்திமுருகன்,<br>9, மாரியம்மன் கோவில் தெரு, சாத்தூர். | -- | 2,11,200 |

<u>அலுவலகக் குறிப்பு:</u>

மேற்கண்ட பொது ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களில் திரு.K.பாஸ்கரன் என்பவரது ஏலக்கேள்வி தொகை ரூ.2,11,100/-ஐ விட திரு.A.சக்திமுருகன் என்பவரது உச்ச ஏலக்கேள்வி தொகை ரூ.2,11,200/- கூடுதலாக உள்ளது. மேலும் மூன்றாண்டு சராசரி தொகை ரூ.1,73,588/-ஐ காட்டிலும் திரு.A.சக்திமுருகன் என்பவரது ஏலக்கேள்வித் தொகை கூடுதலாக இருப்பதால் கூடுதல் ஏலக்கேள்வித் தொகையினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1064/2017/சி2)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.223, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.50</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்-1 நாள்:10.03.2023-ல் முதலமைச்சர் காலை உணவு திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கும் பணியினை 30 தினங்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட சமையற்கூடத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. பொது நிதியில் நிதி இல்லாததால் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 220/2023/ எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண்.224, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண்.51**</u>

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட இருக்கண்குடி நீர்உந்து நிலையத்திலிருந்து சாத்தூருக்கு வரும் 200 MM Di Pumping Main இரயில்வே பாலத்திற்கு கீழ் பகுதியில் Supporting Column 20.03.2023-ல் பெய்த கனமழையில் அடித்து செல்லப்பட்டது. இதனால் குடிநீர் பம்பிங் செய்ய இயலவில்லை. எனவே மேற்கண்ட பழுதினை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,20,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மேற்கண்ட பணியினை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். /2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.225, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

<u>**பொருள் எண்.52**</u>

சாத்தூ நகராட்சிக்கு சொந்தமான நாய் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்தில் நாய்கள் தங்கும் அறை, அறுவை சிகிச்சை அறை, நாய்கள் தாவாமல் இருப்பதற்கு அமைக்கப்பட்ட MS Rod Mesh முற்றிலும் சேதமடைந்துள்ளது. நான்கு அறைகளிலும் கதவுகள் சேதமடைந்துள்ளது. அதனை பழுது பார்க்கும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.1,30,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண். /2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.226, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.53</u>**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 12 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பழுது பார்க்கும் பணி மற்றும் பாதாள சாக்கடை பழுது பார்க்கும் பணியினால் சாலைகள் ஆங்காங்கே சேதமடைந்துள்ளது. அதனை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுதிக்கலாம்.
(ந.க.எண். /2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.227, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.54</u>**

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 முதல் 24 வரை உள்ள வார்டுகளில் குடிநீர் பழுது பார்க்கும் பணி மற்றும் பாதாள சாக்கடை பழுது பார்க்கும் பணியினால் சாலைகள் ஆங்காங்கே சேதமடைந்துள்ளது. அதனை சீரமைக்கும் பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.3,00,000/- இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் அனுதிக்கலாம்.
(ந.க.எண். /2023/ எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண்.228, நாள்: 27.03.2023**
**தீர்மானம்: அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்) ச.குருசாமி,**
**நகர்மன்றத் தலைவர்,**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**